# எனது ஆன்மாவைக் கோருதல்

## இலங்கையின் சுகாதார மற்றும் நீதித் துறைகளில் நிகழும் பாலியல் இலஞ்சம் பற்றிய ஒரு ஆய்வு

சுருக்கவுரைப் பத்திரம்




Centre for Equality and Justice

# எனது ஆன்மாவைக் கோருதல்

## இலங்கையின் சுகாதார மற்றும் நீதித் துறைகளில் நிகழும் பாலியல் இலஞ்சம் பற்றிய ஒரு ஆய்வு

### சுருக்கவுரைப் பத்திரம்



சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தால் (CEJ- Centre for Equality and Justice) 2021 - 2022 வரை மேற்கொள்ளப்பட்ட பண்புசார் ஆய்வின் (qualitative study) மூலமாக இனங்காணப்பட்ட பாலியல் இலஞ்சம் தொடர்பான முக்கிய புரிதல்களை இச் சுருக்கவுரைப்பத்திரம் சுட்டிக்காட்டுகின்றது. ஆய்வின் விரிவான அறிக்கை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தில் கிடைக்கப் பெறும்.

**© சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (Centre for Equality and Justice), இலங்கை.**
**அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.**

வடிவமைப்பு : தனுஹ்ரீ வெலிகல.

நவம்பர் 2022 அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

ஆசிய மன்றத்தால் ஆதரவளிக்கப்பட்டது.

இவ்வெளியீட்டின் எப்பகுதியையும் முழுமையான அனுமதியின்றி மீள் உற்பத்தி செய்யவோ மீளப்பெறும் அமைப்பில் சேமிக்கவோ அல்லது எவ்வகையிலும் மின், இயந்திர, நகலெடுத்தல், ஒலிப்பதிவு அல்லது வேறு எந்தவகையிலும் பரிமாற்றவோ முடியாது.

மேலதிக தகவலுக்கு தயவு செய்து தொடர்புக் கொள்ளவும்:-
சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (Centre for Equality and Justice), இலங்கை
16/1, மொறிஸ் பிளேஸ், கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி/ தொலைநகல் : +94112055404
மின்னஞ்சல் முகவரி: srilanka.cej@gmail.com

**ISBN 9786245847228**

# உள்ளடக்கம்


1. பாலியல் இலஞ்சம் என்றால் என்ன? 7

2. இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழல் 9

3. சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு 10

4. ஆய்வில் பங்குபற்றியோர் 10

    4.1 பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தோர் பங்குபற்றியோரின் சுயவிபரம் 12

    4.2 முக்கிய தகவலளிப்போர்கள் சுயவிபரம் 12

    4.3 அடையாளம் காணப்பட்ட குற்றவாளிகளின் வகைகள் மற்றும் பாலியல் கோரிக்கைக்கான காரணம் 12

5. பாலியல் இலஞ்சத்தைக் கோருவதற்கு உபயோகிக்கப்படும் வழிமுறைகள் 13

6. பாலியல் இலஞ்சங்களுக்கான கோரிக்கைகளுக்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப் பிழைத்தவர்களின் பதில்கள் 14

7. பாலியல் இலஞ்சம்: ஒரு முப்பரிமாணப் பிரச்சினை 17

8. முக்கிய ஆய்வு முடிவுகள் 22

9. பரிந்துரைகள் 25

# பாலியல் இலஞ்சம் என்றால் என்ன?

ஓர் அரசத்துறை உத்தியோகத்தர் ஏதேனும் அரச சேவையை வழங்குவதற்காக பாலியல் கோரிக்கைகளை மேற்கொள்ளும் போது பாலியல் இலஞ்சம் நிகழ்கிறது. பாலியல் கோரிக்கைக்கு இணக்கம் அளித்தாலன்றி, அவர்கள் கோரும் சேவை வழங்கப்பட மாட்டாது என தனி நபர்கள் நம்ப வைக்கப்படுகின்றனர். இதற்கான உதாரணங்கள், விளக்கமறியல் காவலிலுள்ளவர்களைச் சந்திப்பதற்கு குடும்ப உறுப்பினர்களுக்குள்ள உரிமைகள், பொலிஸில் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கை மற்றும் ஒரு அரச வைத்தியசாலையில் சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. **பெண் நீதிபதிகளின் சர்வதேச அமைப்பு** (The International Association of Women Judges), பாலியல் இலஞ்சத்தை **'பாலியல் சலுகைக்கான மிரட்டல்'** (Sextortion) என விபரிக்கின்றதுடன் அதனை **'ஓர் அரசாங்க அனுகூலத்திற்கான பரிமாற்றமாக பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான ஒரு வெளிப்படையான அல்லது மறைமுகமான வேண்டுகோள்'**[1] என வரைவிலக்கணப்படுத்துகின்றது. டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் (Transparency International) இதனை **'பணத்திற்குப் பதிலாக, இலஞ்சத்திற்கான நாணயமாக விபரிக்கிறது. இது சில நாடுகளுக்கு அல்லது சில துறைகளுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை. ஆனால் இது, அதிகாரம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள நேர்மை இல்லாதவர்கள், தங்களின் அதிகாரத்தில் தங்கியிருக்கின்ற நலிவடைந்தவர்களை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகிக்க முயற்சிப்பதைக் காணமுடிகின்றது.'**[2]

உலகளாவிய ரீதியில், பாலியல் இலஞ்சமானது பாரதூரமான பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளதோடு இதற்கான தீர்வு எட்டப்பட வேண்டும் என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயம் (2004), பாலியல் இலஞ்சத்தை அங்கீகரிக்கவோ அல்லது தடை செய்யவோ இல்லை. ஆனாலும், ஐக்கிய நாடுகள்[3] மற்றும் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் போன்ற ஏனைய முன்னணிச் சர்வதேச அமைப்புகள் பாலியல் இலஞ்சத்தை ஊழலின் ஒரு வடிவமாக ஏற்றுக்கொண்டுள்ளன. அதே சமயம், இது மனித உரிமை மீறல் மற்றும் ஒரு குற்றமாகும்.[4]

இலங்கையில், இலஞ்சச் சட்டம் (1965) ஒரு அரசச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக அல்லது அரசச் சேவையின் நிறைவேற்றத்திற்காக செல்வாக்குச் செலுத்துவதற்கு 'அவாநிறைவைக்' (gratification) கோருதல் அல்லது வழங்குதல் இலஞ்சம்[5] ஆகும் எனத் தெரிவிக்கின்றது. இச்சட்டம் 'அவாநிறைவை' பரந்த வகையில் வரைவிலக்கணம் செய்கின்றது.[6] எனவே, சட்டத்தை அமுல்ப்படுத்தும் அதிகாரங்கள் மற்றும் நீதித்துறைக்கு இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தை விளக்கி பாலியல் இலஞ்சம் மீதான தடையை உள்ளடக்ககூடியதாக காணப்படுகின்றது. **'அவாநிறைவு' இலஞ்சச் சட்டத்தின் கீழ் உள்ளடங்குவதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் 1998 இல் தீர்மானித்தமை, அதனை பரந்த அர்த்தத்தில் பயன்படுத்தியது... உடலுறுவுக்கான ஏக்கம் 'இதன் ஓர் உதாரணமாக மனம் மற்றும் உடல் ரீதியான ஆசைகள், அதன் திருப்தி அவாநிறைவு, பணத்தில் மதிப்பிடப்பட முடியாததாக காணப்பட்டது'**[7]

இவ்வழக்கில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஓர் ஆண் சிரேஷ்ட பாதுகாப்பு முகாமையாளர் ஒரு பெண் பாதுகாப்பு உத்தியோகத்தரிடமிருந்து பாலியல் இலஞ்சம்

[1] பொருத்தமில்லா வகையில் பெயரிட்டு அழைத்தல், கேலி பண்ணுதல் மற்றும் பாலியல் சலுகைக்காக மிரட்டுதலை முடிவுகட்டுதல்: கருவித் தொகுதி (பெண் நீதிபதிகளின் சர்வதேச அமைப்பு 2012) (ஆங்கில ஆதாரம்)

[2] பாலியல் சலுகைக்கான மிரட்டுதலைச் சுற்றியுள்ள மௌனத்தை உடைத்தல்: அதிகாரம், பாலியல் மற்றும் ஊழல் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு 8 (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல்) (ஆங்கில ஆதாரம்)

[3] ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயம், மற்றும் நாடுகளுக்கிடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்திற்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயம் ஆகிய இரண்டு ஐக்கிய நாடுகள் சமவாயங்களினால் ஊழல் பற்றிய வரைவிலக்கணம் பாலியல் இலஞ்சத்தை உள்ளடக்குவதாக பொருள்கொள்ளப்பட முடியும். இலங்கை இச் சமவாயங்களை முறையே 2004 மற்றும் 2006 இல் ஏற்று வலுவளித்தது. (ஆங்கில ஆதாரம்)

[4] பாலியல் சலுகைக்கான மிரட்டல்: ஊழல் மற்றும் பாலியல் சுரண்டலின் ஒரு குற்றம் (சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் 2019) (ஆங்கில ஆதாரம்)

[5] 1954 ஆம் ஆண்டின் இலஞ்சச் சட்டம் திருத்தப்பட்டவாறு (ஆங்கில ஆதாரம்)

[6] இலஞ்சச் சட்டம் பிரிவு 90 (ஆங்கில ஆதாரம்)

[7] கதுப்டீன் எதிர் இலங்கைக் குடியரசு (1998) 3 இலங்கை107, 117. நீதிமன்றம் எச்.எஸ்.கவரை (ர் ளு புழரச) மேற்கோள் காட்டியது, இந்திய தண்டனைச் சட்டம், (இந்திய சட்டப் பதிப்பகத்தவர்கள்) தொகுதி 1 (தீர்ப்பில் பதிப்பு குறித்துரைக்கப்படவில்லை). (ஆங்கில ஆதாரம்)

கோரியதற்காக இலஞ்சச் சட்டத்தின் கீழ் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டார். இலங்கையில், பாலியல் இலஞ்சம், இலஞ்சச் சட்டத்தின் கீழ் வருவதாக அங்கீகரிக்கப்பட்டு, அறிவிக்கப்பட்ட ஒரேயொரு வழக்கு இதுவாகும். சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தால் நடாத்தப்பட்ட ஆய்வுகள், 2021/ 2022 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு உள்ளடங்கலாக பாலியல் இலஞ்சம் ஒரு தீவிர பிரச்சினையாக இருப்பதை வெளிக்காட்டுகின்றன. பாலியல் இலஞ்சம் குறித்து இவ் அறிக்கைகள் குறிப்பிட்ட போதிலும், வழக்குத் தொடர்தல்கள் மற்றும் குற்றத்தீர்ப்பளித்தல்கள் இல்லாமை, பாலியல் இலஞ்சத்தைக் கையாள்வதில் காணப்படும் உட்கிடையான தடை போதுமானதாகவோ அல்லது பயனுறுதியானதாகவோ இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. பாலியல் இலஞ்சத்தைத் தடுப்பதற்கும் தீர்வு காண்பதற்கும் மற்றும் ஊழலின் ஒரு வடிவமாக, ஒரு குற்றவியல் தவறாக மனித உரிமைகளின் ஒரு மீறலாக அதனை அங்கீகரிப்பதற்கு, சட்டமானது பாலியல் இலஞ்சத்தை வெளிப்படையான வகையில் தடை செய்தல் வேண்டும். சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையமானது பாலியல் இலஞ்சத்தைக் குற்றமாக்குவதற்கு இலஞ்சச் சட்டத்தைத் திருத்துவதற்காக பரிந்துரைத்துள்ளது. இவ் ஆய்வில் பங்குபற்றியவர்கள் பாலியல் இலஞ்சத்தைத் தடுப்பதற்கும் மற்றும் தீர்வு காண்பதற்கும் ஒரு தெளிவான, குறிப்பிட்ட மற்றும் வலுவான சட்டம் அவசியமென்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர்.



# இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழல்

இதுவரை நடாத்தப்பட்ட ஆய்வுகளின்படி, இலஞ்சம் மற்றும் ஊழல் ஆகியன இலங்கையில் முறையான மற்றும் வேரூன்றிவையாக காணப்படுகின்றன. 60% இற்கும் அதிகமானவர்களின் பாலியல் இலஞ்ச சம்பவங்கள் தொடர்பில் நேரடியாக அல்லது வேறுவகையில் அறிந்திருந்தாகத் தெரிவித்தமையால் அது ஒரு முக்கியமான பிரச்சினையாக இனங்காணப்பட்டது.[8] ஊழல் தொடர்பான அவதானித்தல் குறிக்காட்டியில் 180 நாடுகளில் இலங்கை 102 ஆவது இடத்தில் உள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் பெற்ற புள்ளிகள் 100 இற்கு 37 ஆகும்.[9] உலக ஊழல் நிலைச் சுட்டியின்படி, 79% ஆனவர்கள் அரசாங்க ஊழல் ஒரு பாரிய பிரச்சினை என எண்ணுவதாகவும் மற்றும் அரச சேவைப் பெறுபவர்களில் 16% ஆனவர்கள் முன்னைய 12 மாதங்களில் இலஞ்சம் கொடுத்திருந்தனர் (2020 இன்படி இருக்கின்ற தரவுகளிற்கமைவாக).[10]

உலக ஊழல் நிலைச்சுட்டி 2019 இலங்கை அறிக்கை நாட்டில் பாலியல் சலுகைக்கான மிரட்டல் (sextortion) நிகழ்வு தொடர்பான உட்புரிதல்களை வழங்குகின்றது. இவ் அறிக்கையின் படி, 60% இற்கும் அதிகமானவர்கள் பாலியல் இலஞ்சத்திற்கான கோரிக்கைகள் சம்பந்தமான நேரடியான அனுபவத்தைக் கொண்டிருந்தனர் அல்லது அவ் அனுபவத்தைக் கொண்டிருந்தவர்கள் தொடர்பாக அறிந்திருந்தனர்.[11] பதிலளித்தவர்களில் 46% இனர் பாலியல் சலுகைக்கான மிரட்டுதல் எப்போதாவது, அநேகமான சமயங்களில் அல்லது மிக அதிகளவான சந்தர்ப்பங்களில் நிகழ்கின்றதாக உணர்ந்தனர்.[12] பாலியல் சலுகைக்கான மிரட்டுதல் கூடுதலாகக் காணப்படுவதை கிராம மட்டத்தில் பதிலளித்தவர்களை விட நகர்ப்புறத்தில் பதிலளித்தவர்கள் உணர்ந்திருந்தனர். குறிப்பாக, பெருந்தோட்டத்துறையிலிருந்த ஆய்வு மாதிரியில் பங்குபற்றிய அரைப்பங்கினர் 'பாலியல் சலுகைக்கான மிரட்டுதல் அநேமான சமயங்களில் அல்லது மிக அதிகளவான சந்தர்ப்பங்களில் நிகழ்ந்ததாக' உணர்ந்துள்ளனர்.[13]

அரசச் சேவையை அணுகுவதில் பெண்களின் அனுபவம் தொடர்பாக, 2014 இல் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், 52.3% ஆன பெண்கள் இலஞ்சம் மற்றும் ஊழலை, ஆய்விற்கு முன்னதான 6 மாதங்களின் போது அனுபவித்ததாகக் கண்டறியப்பட்டது. இவ் ஆய்வு, 501 குடும்பங்கள் மற்றும் அரசச் சேவையின் 10 பிரதான துறைகளில் நடாத்தப்பட்டது. சட்டத்துறை, பிரதேச செயலகம் மற்றும் சுகாதாரத் துறையில் முறையே 58.1%, 30.9% மற்றும் 28% இல் ஊழல் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும், இவ் ஆய்வில் பெருந்தோட்டத்துறையை சேர்ந்த பெண்கள் (65.6%), மற்றும் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள பெண்கள் (64.8%) இலஞ்சம் மற்றும் ஊழல் ஆகியவற்றினால் அதிகளவில் பாதிக்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இவ் ஆய்வின் அடிப்படையில் நகர்ப்புறப் பெண்களை விட (38.6%) கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் (68.2%) இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு ஆளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதியாக, பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் (59.7%), ஆண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களை (49.6%) விட இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு ஆளாகும் நிலை காணப்படுவதாக கண்டறியப்பட்டது.[14] சராசரி இலஞ்சப் பணமாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ.1,429.00 என இவ் ஆய்வினால் கணிக்கப்பட்டது.

பாலியல் இலஞ்சம் தொடர்பாக கடந்த பல வருடங்களில் மூன்று ஆய்வுகளை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் மேற்கொண்டுள்ளது. 'இலங்கையின் வடக்கில் போரினால் பாதிக்கப்பட்டப் பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் பாலியல் சுரண்டல்' (மார்ச் 2016) ஆய்வு, பாலியல் இலஞ்சத்தில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் (Victims – Survivors) அனுபவங்களைக் கொண்ட இருபத்தைந்து சம்பவக் கற்கைகளை (Case studies) அடிப்படையாகக் கொண்டமைந்தது. இப் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட வட மாகாணம் மற்றும் புத்தளம் மாவட்டத்திலிருந்தவர்களாவர். 'மறைக்கப்பட்ட இரகசியம் : போர் நடைபெற்ற மாவட்டங்களில் போருக்குப் பின்னரான முஸ்லிம் பெண்களின் பாலியல் இலஞ்சம்' (ஜூலை

[8] உலக ஊழல் நிலைக் குறிக்காட்டி 2019 இலங்கை (ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் 2019)30 (ஆங்கில ஆதாரம்)
[9] உலக ஊழல் நிலைச் சுட்டி 2019 இலங்கை (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் 2019)3 https://www.transparency.org/en/countries/sri-lanka (ஆங்கில ஆதாரம்)
[10] உலக ஊழல் நிலைச் சுட்டி 2019 இலங்கை (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் 2019 51 https://www.transparency.org/en/countries/sri-lanka (ஆங்கில ஆதாரம்)
[11] 'உலக ஊழல் நிலைச் சுட்டி 2019 இலங்கை' (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் 2019) 30 (ஆங்கில ஆதாரம்)
[12] 'உலக ஊழல் நிலைச் சுட்டி 2019 இலங்கை' (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் 2019) 19 (ஆங்கில ஆதாரம்)
[13] 'உலக ஊழல் நிலைச் சுட்டி 2019 இலங்கை' (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் 2019) 19 (ஆங்கில ஆதாரம்)
[14] 'அரசச் சேவையில் ஊழலில் பெண்களின் அனுபவம்' (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல், இலங்கை, ஜூன் 2014) 42 (ஆங்கில ஆதாரம்)

2018) என்பது பாலியல் இலஞ்சம் தொடர்பாக முஸ்லிம் பெண்களிடையே நடாத்தப்பட்ட பத்து நேர்க்காணல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வாகும். இவ் ஆய்வில் பங்குபற்றியவர்கள் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலன்னறுவை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்தவர்களாவர். இலங்கையில் இராணுவத் தரப்பைச் சேர்ந்த கணவரை இழந்தப் பெண்களில் பாலியல் இலஞ்சம் (ஜூலை 2018) என்ற ஆய்வானது அநுராதபுரம், குருநாகல் மற்றும் காலி மாவட்டங்களிலிருந்து பத்து சம்பவக் கற்கைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ‘இலங்கையில் பாலியல் இலஞ்சத்தைக் கவனம் கொள்வதற்கு சட்டம் மற்றும் கொள்கைத் திருத்தம் மேற்கொள்ளல’ (ஆகஸ்ட் 2020) மற்றும் ‘இலங்கையில் பாலியல் இலஞ்சத்தை முடிவுறுத்தல், சட்ட மற்றும் நடைமுறைச் சீர்திருத்தங்கள், பாகம் II’ (ஏப்ரல் 2022) ஆகிய அறிக்கைகள் மூலம் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் குறிப்பாக பாலியல் இலஞ்சத்தைக் குற்றமாக்குவதற்கு இலங்கைச் சட்டத்தை சீர்திருத்துவதற்கான பரிந்துரைகளை மேற்கொள்கின்றது.[15]

## சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு

**இலங்கையில் பாலியல் இலஞ்ச நிகழ்வு மற்றும் அதன் தன்மை என்பவற்றைப் புரிந்து கொள்வதற்கான அதன் முயற்சிகளைத் தொடர்வதில் 2021 - 2022 காலப்பகுதியில் ஓர் ஆய்வினை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் மேற்கொண்டது.** இவ் ஆய்வு அரசச் சேவையிலுள்ள இரண்டு முக்கியமான துறைகளான, நீதி மற்றும் சுகாதாரம் ஆகியவை மற்றும் இரண்டு குறிப்பிடத்தக்க குழுக்களான பெண்கள் மற்றும் மாற்றுப் பாலின சமூகம் (LGBTIQ) மீதும் கவனம் செலுத்தியது. தென் மாகாணத்தைத் தவிர்த்து, பாலியல் இலஞ்சம் தொடர்பான ஆய்விற்காக ஏற்கனவே இலக்குக் கொள்ளப்பட்ட மாகாணங்களை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் இவ் ஆய்விலிருந்து விலக்கியது. அதனால், இவ் ஆய்வு மத்திய, மேல், ஊவா, தென் மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களிலிருந்து 19 ஆழமான நேர்காணல்கள் (In depth interviews) மற்றும் ஐந்து தெரிவுச் செய்யப்பட்ட குழுக்களின் கலந்துரையாடல்கள் (Focused group discussions) என்பவற்றை உள்ளடக்கியது. இவை மூலம் பெறப்பட்ட உள்நோக்குகள், தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் நீதி மற்றும் சுகாதாரத் துறைகளிலுள்ள முக்கிய தகவல்கள் அளிப்பவர்களுடனான (Key informants) மேலும் பன்னிரெண்டு நேர்காணல்கள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டது.

இலங்கையில் பெண்கள் மற்றும் மாற்றுப் பாலினத்தவர்கள் பாரபட்சத்தை அனுபவிக்கின்றனர். மேலும், இலங்கையில் தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 365 இற்கு அளிக்கப்பட்ட பொருள்கோடல் காரணமாக, பாலியல் ரீதியான மற்றும் மாற்றுப் பாலினத்தவர்கள் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக கருதப்படுகின்றனர்.[16] இத் தீவிரப் பிரச்சினை வேலைவாய்ப்பு, வீட்டுவசதி, சட்டப் பரிகாரங்கள் போன்றவற்றை அணுகுவதற்கான உரிமைகளை அடைவதில் மாற்றுப் பாலின சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு எதிராக ஏனைய வடிவங்களிலான பாரபட்சங்களுக்கு வழிவகுக்கின்றன.

## ஆய்வில் பங்குபற்றியோர்

### பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தோர் பங்குபற்றியோரின் சுயவிபரம்

இவ் ஆய்வு பெண்கள் மற்றும் மாற்றுப் பாலினத்தவர்களின் ஒரு தொகையானவர்களைச் சம்பந்தப்படுத்துகின்றதுடன் அவர்களின் முக்கிய குணவியல்புகள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

[15] இலங்கையில் பாலியல் இலஞ்சத்தை முடிவுக்கு கொண்டுவருதல்: சட்ட மற்றும் நடைமுறைசார் சீர்திருத்தங்கள பகுதி 2

[16] ‘அறிவு, மனப்பாங்குகள் மற்றும் கண்ணோட்டங்கள் மதிப்பாய்வு அறிக்கை: பாலியல் தன்மை மற்றும் இலங்கையில் மாற்றுப் பாலின சமூகத்தின் அனுபவங்கள் பற்றிய இலங்கைச் சமுதாயத்தின் பார்வைகள்’ (சமூக விஞ்ஞானிகள் சங்கம் 2021) ‘மாற்றுப் பாலினூ இலங்கையர்களை பின்னே விட்டுச் செல்லும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மீள்சிந்தித்தல்’ (ஜனநாயகத்திற்கான வெஸ்ட்மினிஸ்டர் மன்றம் 2021) (ஆங்கில ஆதாரம்)

| மாகாணம் | மாவட்டம் | வயது (விபரம் பெறப்படும் சமயத்தில்) | ஏனைய விபரங்கள் |
|---|---|---|---|
| மத்திய மாகாணம் | கண்டி | 49 | கணவரை இழந்த தாய் |
| | ஹட்டன் | 49 | தாய் (திருமணமானவர்), வாழ்க்கைத்துணை உடல்நலமற்றவர் |
| | மாத்தளை | 50 | தாய் (திருமணமானவர். சம்பவம் கணவர் வெளிநாட்டில் பணி செய்யும் போது நடைபெற்றது) |
| | மாத்தளை | 23 | பெண் (இல்லத்தரசி) |
| | கண்டி | 23 | பெண் (இல்லத்தரசி) |
| | கண்டி | 32 | பெண் (இல்லத்தரசி) |
| | மாத்தளை | 49 | பெண் (சிறு தேயிலைத் தோட்டத்தின் துணை உரிமையாளர்) |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 38 | தாய் |
| | இரத்தினபுரி | 43 | தாய், சுயதொழில் |
| | இரத்தினபுரி | 46 | தாய் , கணவருடன் இணைந்து உணவு வியாபாரத்தைச் சொந்தமாகக் கொண்டிருக்கிறார் |
| தென் மாகாணம் | அம்பாந் தோட்டை | 22 | பாடசாலை மாணவி |
| | அம்பாந் தோட்டை | 39 | தாய் |
| | மாத்தறை | 42 | சுகாதாரத்துறையில் பணியாற்றும் மாற்றுத் திறனாளியான பெண் |
| | அம்பாந் தோட்டை | 29 | பெண் - மருத்துவ மாணவி |
| | காலி | 44 | பெண் - புலம்பெயர் வீட்டுப் பணியாளர் |
| மேல் மாகாணம் | கொழும்பு | 38 | திருநங்கை - பாலியல் தொழிலாளர் |
| | கம்பஹா | 40 | பெண் - பாலியல் தொழிலாளர் |
| | கொழும்பு | 22 | திருநங்கை - பாலியல் தொழிலாளர் |
| | கொழும்பு | 23 | திருநங்கை - பாலியல் தொழிலாளர் |

## முக்கிய தகவலளிப்போர்கள் சுயவிபரம்

| சுகாதாரத் துறை | நீதித் துறை |
|---|---|
| மனநல மருத்துவ ஆலோசகர் | பிரதான பொலிஸ் பரிசோதகர் |
| மருத்துவப் பின்பட்டப்படிப்பு பயிலுனர் | பொலிஸ் பரிசோதகர் |
| வைத்தியர் மற்றும் கல்வியியலாளர் | குற்றம் மற்றும் சாட்சிகளின் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை உத்தியோகத்தர் |
| பொதுச் சுகாதார மருத்துவமாது (Midwife) | சட்டத்தரணி |
| பொதுச் சுகாதார மருத்துவமாது | இலஞ்ச ஆணைக்குழு உத்தியோகத்தர் |
| ஓய்வுபெற்ற தாதி மற்றும் கல்வியியலாளர் | சட்டத்தரணி |

## அடையாளம் காணப்பட்ட குற்றவாளிகளின் வகைகள் மற்றும் பாலியல் கோரிக்கைக்கான காரணம்

பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களால் இனங்காணப்பட்ட அனைத்துக் குற்றவாளிகளும் ஆண்களாவர். எவ்வாறாயினும், சில சந்தர்ப்பங்களில் பெண்களும் குற்றவாளிகளாக அடையாளங் காணப்பட்டுள்ளனர் என நீதித்துறையின் ஒரு முக்கிய தகவல் தருபவர் குறிப்பிட்டார். சுகாதாரத் துறையிலிருந்த ஒரு முக்கிய தகவலளிப்பவர் கூட இவ் அவதானிப்பைக் குறிப்பிட்டிருந்தார். இருந்தபோதிலும், முக்கியமான தகவல் அளிப்பவர்களுடனான நேர்காணல்களில் அவர்களின் கண்ணோட்டத்தில் பிரதானமான குற்றமிழைத்தவர்கள் ஆண்கள் என்பது முக்கியமானது.

| குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளி | அளிக்கப்பட்ட சேவை/ தூண்டல் சம்பவம் |
|---|---|
| நீதித்துறை | |
| ஆண் சட்டத்தரணி | கூட்டுக் குடும்பத்தினுள் காணிப் பிணக்கின் காரணமாக சட்ட ஆலோசனையை நாடியமை |
| ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | மகள் காணாமற் போனது பற்றி பொலிஸ் முறைப்பாடு காரணமாக |
| ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | விளக்கமறியலில் வைக்கப்பட்ட கணவனுக்கு பிணை பெறுதல் |
| ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | காணாமற் போன அடையாள அட்டையை மீள்மாற்றும் பொருட்டு ஒரு பொலிஸ் முறைப்பாட்டை மேற்கொண்டமை |
| ஆண் சட்டத்தரணி | பிணைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையை ஏற்படுத்திய ஒரு காணிப் பிணக்குத் தொடர்பாக சட்டப் பிரதிநிதித்துவத்தை நாடியமை |
| ஆண் சட்டத்தரணி | காணிப் பிணக்குத் தொடர்பாக சட்டப் பிரதிநிதித்துவத்தை நாடியமை |
| ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | விவாகரத்து நடவடிக்கைகளில் சட்ட அமுல்படுத்துதல் |
| ஆண் சிறைச்சாலை உத்தியோகத்தர் | விளக்குமறியலிலுள்ள கணவனை சந்திப்பதற்காக |

| குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளி | அளிக்கப்பட்ட சேவை/ தூண்டல் சம்பவம் |
|---|---|
| ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | புலம்பெயர்த் தொழிலிற்காக புறப்படுவதற்கு முன் குடும்ப நன்மை அறிக்கைக்காக அனுமதி பெறுதல் |
| ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் | காவலில் இருந்து விடுவிக்கப்படுவதற்கு, குற்றச்சாட்டுகளை குறிப்பிடுவதைத் தவிர்ப்பதற்காக |
| ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் | காவலில் இருந்து கணவனை விடுவிப்பதற்காக |
| ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் | குற்றச்சாட்டுகளை குறிப்பிடாதிருப்பதற்கும் மற்றும் காவலில் இருந்து விடுவிப்பதற்குமாக |
| சுகாதாரத்துறை | |
| ஆண் தாதி | வைத்தியசாலைப் பராமரிப்பைப் பெற்றுக் கொள்கையில் கணவருக்கு மேலதிக கவனிப்பு அளிக்கப்பட்டமை |
| ஆண் வைத்தியசாலை உதவியாளர் | தாயின் வைத்தியசாலையில் சிகிச்சை ஆலோசனைகளுக்காக ஒரு ஒழுங்குவரிசை இலக்கத்தைப் பெற்றுக் கொண்டமை |
| ஆண் வைத்தியசாலை உதவியாளர் | வைத்தியசாலையில் தாயின் சிகிச்சை ஆலோசனைகளுக்காக ஒரு ஒழுங்குவரிசை இலக்கத்தைப் பெற்றுக் கொண்டமை |
| ஆண் வைத்தியர் | மருத்துவ ஆலோசனையை நாடியமை |
| ஆண் பொதுச் சுகாதாரத்துறை உத்தியோகத்தர் | ஓர் இடமாற்றத்தைத் தடுப்பதற்கு நாடியமை |
| மேற்பார்வை வைத்தியர் | பயிற்சியின் போது விடுதி வசதிகளுக்காக பரிந்துரைத்தலை நாடியமை |
| ஆண் வைத்தியசாலை உதவியாளர் | வைத்தியசாலையில் பிரயோகத்திலுள்ள விதிகளை மீறி ஒரு நோயாளியை பார்ப்பதற்கான அனுமதியை வழங்கியமை |

## பாலியல் இலஞ்சத்தைக் கோருவதற்கு உபயோகிக்கப்படும் வழிமுறைகள்

பாலியல் கோரிக்கைகளை மேற்கொள்வதற்காகப் பல்வகையான வழிமுறைகளை குற்றவாளிகள் உபயோகித்தனர். இவை வாய் மொழி மூலமான நேரடி வேண்டுகோள்கள், வாய் மொழி மூலமான ஆனால் மறைமுகமான வேண்டுகோள்கள், தொலைப்பேசி அழைப்புகள், மற்றும் குறுஞ்செய்திகள் (text messages) என்பவற்றை உள்ளடக்குகின்றன. சில சந்தர்ப்பங்களில், பாலியல் இலஞ்சத்திற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். குற்றவாளிகளால் உடல் ரீதியான வன்முறைகள் இழைக்கப்பட்டதாக, இவ் ஆய்வில் பங்குபற்றிய மாற்றுப் பாலின சமூகத்தவர்களால் அடிக்கடி தெரிவிக்கப்பட்டது.

## பாலியல் இலஞ்சங்களுக்கான கோரிக்கைகளுக்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் பதில்கள்

இவ் ஆய்வில் பங்குபற்றிய அநேகமான பாதிக்கப்பட்டுத தப்பிப்பிழைத்தவர்கள் பாலியல் இலஞ்சத்திற்கான கோரிக்கைகளுக்கு இடமளிக்க மறுத்தனர். கோரிக்கைகளுக்கு இடமளித்த, இவ் ஆய்வில் பங்குபற்றிய மாற்றுப் பாலின சமூகத்தின் பாலியல் தொழிலாளர்கள் குற்றவாளிகளிடமிருந்து தப்புவதற்கான அல்லது அவர்களைத் தவிர்ப்பதற்கான வாய்ப்பினைக் கொண்டிருக்கவில்லை. பாலியல் இலஞ்சத்திற்கான ஒரு கோரிக்கைக்கு ஆளாகிய பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் கோபம், விரக்தி, அச்சம், மற்றும் மனவுளைச்சல் உணர்வுகளை வெளிக்காட்டினர்.

# பாலியல் இலஞ்சம்: ஒரு முப்பரிமாணப் பிரச்சினை

பாலியல் இலஞ்சம் ஒரு சிக்கலான பிரச்சினை என்பதுடன் அது பல பரிமாணங்களைக் கொண்டது. பாலியல் இலஞ்சமானது ஊழலின் ஒரு வடிவமாக, மனித உரிமை மீறலாக மற்றும் ஒரு குற்றவியல் தவறாக என, மூன்று ஒன்றோடு ஒன்று தொடர்பான அம்சங்கள் மீது இவ்வாய்வு கவனம் செலுத்துகின்றது. இவ் அம்சங்கள் நெருக்கமான ஒன்றின் மீது இன்னொன்று தொடர்புப்பட்டவையாக காணப்படுகின்றன.

## 1. பாலியல் இலஞ்சம் ஊழலாகும்

> ‘ இலஞ்சத்தின் கீழ்த்தரமான வடிவம் இதுவாகும். இது ஒருவரின் ஆன்மாவினைக் கேட்பதற்கு ஒத்ததாகும் ’
>
> ஜீவா (மாத்தளை மாவட்டம், மத்திய மாகாணம்)

> ‘ இச் சம்பவத்தின் பின்பு, ஒரு ஆணுடன் அதிகம் பேசுவதற்கு நான் மிகவும் பயந்தேன். பேசும் பொழுது தனியே அவர்களது முகத்தை மட்டும் பார்ப்பேன். ஓர் அரசாங்க உத்தியோகத்தருடன் கூட இப் பிரச்சினை பற்றி பேசுவதற்கு நான் பயந்தேன் ’
>
> சீதா (ஹட்டன், மத்திய மாகாணம்)

இவ் ஆய்விற்காக பரிசீலிக்கப்பட்ட பாலியல் இலஞ்சச் சம்பவங்கள் குறிப்பாக அதிகாரத் துஷ்பிரயோகத்தின் ஓர் அதிர்ச்சியூட்டும் வடிவங்களாக இருந்தன. அரசின் முகவர்கள், சட்டத்தினால் அவர்கள் வழங்குவதற்கு கட்டுப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதற்கு பாலியல் இலஞ்சத்தைக் கோரியதன் மூலம், சட்டத்தினால் அளிக்கப்பட்ட அதிகாரம் மற்றும் தற்துணிவினை அவர்கள் துஷ்பிரயோகித்தனர். ஆழமான நேர்காணல்கள், குற்றமிழைத்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பிப்பதை வெளிக்காட்டியது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மன ரீதியான அதிர்ச்சி/களங்கம் அல்லது அவப்பெயர் என்பவற்றைக் கையாள்வதற்கு விடப்பட்டதுடன் அவர்கள் பயனுறுதியான சட்டப் பரிகாரங்களைக் கொண்டிருக்கவில்லை.

அதனால், பாலியல் இலஞ்சம், வேரூன்றிப் போயுள்ள ஊழலின் சான்றாக அமைகிறது. தனது மக்களுக்கு சேவை வழங்குவதில் தனித்துவமான அதிகாரம் மற்றும் பலத்தைப் உபயோகிக்கும், அதன் முக்கிய செயற்பாட்டை நிறைவேற்றுவதில், அரசு தவறுகின்றமை இதற்கு சான்றாகின்றது. பாலியல் இலஞ்சம், ஜனநாயகம் தோல்வியடைகிறது என்பதற்கான ஓர் அறிகுறியாகவும் உள்ளது. மக்களின் பிரதிநிதிகளும் முகவர்களும் சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டுத் தங்களது கடமைகளை மேற்கொள்வதற்குத் தவறுவது மாத்திரமின்றி வாக்கு மற்றும் சட்டத்தின் ஊடாக பெற்றுக் கொண்ட அதிகாரத்தினையும் அவர்கள் மோசமாகத் துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

## 2. பாலியல் இலஞ்சம் ஒரு மனித உரிமை மீறலாகும்

> ‘ வேலைக்காக எதனையும் செய்வதற்கு எனது மனம் தயாராகியது. எனினும், எனது வேலைக்காக நான் முழு வாழ்க்கையையுமே தியாகம் செய்ய வேண்டியதாகியது. அவர் இரண்டு நாட்களாக என்னை அழைத்தப்படி இருந்தார். எனக்கு உதவியில்லாத நிலையிலும் மற்றும் எனக்கு வேறு தெரிவுகள் எதுவுமில்லாததினால், இரண்டாம் நாள், அவரின் கோரிக்கைக்கு இணங்குவதற்கு நான் உடன்பட்டேன். நான் வரவேண்டும் என அவர் அழைக்கும் இடமெல்லாம் நான் வருவேன் என அவரிடம் நான் கூறிய பொழுது அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார் ’
>
> இரோமி (மாத்தறை மாவட்டம், தென் மாகாணம்)

“ நான் முற்றிலுமாக மனமுடைந்துள்ளேன் (சம்பவத்தினால்). ஏனென்றால், நான் தவறு எதுவும் செய்யவில்லை. உடற்பாகங்கள் வெளித்தெரிகின்ற வகையில் கூட உடைகள் அணிந்து கொள்ளும் நபர் நான் இல்லை. சம்பவத்தின் பின், நான் நன்கு தூங்குவதில்லை, என்னால் கவனம் செலுத்துவதற்கு முடியவில்லை மற்றும் நான் மிகவும் மறதி கொண்டவளாகி விட்டேன். இது போன்ற நிகழ்வுகள் முன்னரும் நடந்துள்ளதினால், இவ்வாறான விடயங்கள் எனக்கு ஏன் நிகழ்கின்றது என யோசிக்கிறேன். இவ்வாறான முன்னைய நிகழ்வுகளை நான் எண்ணிப் பார்க்கிறேன். அந் நாளிலிருந்து (பாலியல் இலஞ்சச் சம்பவம்), இன்று வரை, நடந்த அச் சம்பவங்களை நான் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கின்றேன் ”

“ இச் சம்பவத்தின் பின், முன்னைய ஞாபகங்கள் அனைத்தும் என் மனதைத் தாக்குகின்றன. எனது உயிரை நானே எடுத்துக் கொள்வதற்குக் கூட எண்ணினேன் ”

மனோரி (கம்பளை, மத்திய மாகாணம்)

“ உண்மையில், அந்த பொலிஸ் உத்தியோகத்தரால் நான் என் மீதே மிகவும் கோபமடைந்ததுடன் கவலையடைந்தேன். ஏனென்றால், நான் தனியாக மற்றும் உதவியில்லாது இருந்த போது அவர் இச்செயலைப் புரிந்தார். நான் மிகவும் உதவியற்றிருந்தேன். நான் எந்தத் தவறினையும் செய்யவில்லை ”

மனோரி (கம்பளை, மத்திய மாகாணம்)

பாலியல் இலஞ்சம் தங்களது மனித கௌரவத்தை மீறுகின்றது என பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் தெரிவித்தனர். அவர்களுக்கு இழைக்கப்பட்ட பாலியல் தீங்கே மன அதிர்ச்சி மற்றும் அவப் பெயரினைச் சுமக்கின்றது. இது ஆளொருவரின் உடல் ரீதியான நேர்மை மற்றும் அந்தரங்கத்திற்கான உரிமை என்பவற்றின் ஒரு மீறலாகும். பாலியல் இலஞ்சம் காரணமாக மன ரீதியான மற்றும் உடல் ரீதியான பல பிரச்சினைகளை அவர்கள் முகங் கொடுக்க வேண்டியிருந்ததாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் பலர் குறிப்பிட்டனர். அத்தோடு அரசத்துறை உத்தியோகத்தர்கள் எவ்வாறானவர்கள் எனத் தங்களது அபிப்பிராயம் மீது எவ்வாறு இந் நிகழ்வுகள் ஒரு நீண்ட காலப் பாதிப்பைக் கொண்டிருந்தது என்பதையும் அவர்கள் குறிப்பிட்டனர். பல சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் அரசச் சேவைகளை அணுகுவதற்கான உரிமை, வாழ்வாதாரத்திற்கான உரிமை மற்றும் காவலிலுள்ள நபர்களுக்கான குடும்ப உறுப்பினர்களின் உரிமைகள் போன்ற ஏனைய உரிமைகளை அனுபவிப்பதிலிருந்து பாலியல் இலஞ்சம் அவர்களைத் தடுக்கின்றது.

அதனால் பாலியல் இலஞ்சம், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் அதே போன்று பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை மீறுகின்றது. இவ் ஆய்வில், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் அநேகமானவர்கள், தாங்கள் அனுபவித்த துன்பங்களுக்காக பரிகாரங்களை நாட முடியவில்லை என்பது வெளியாகியது. செயற்திறன் மிக்க பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கும் வகையில் இருக்கவில்லை. இவ் விடயம் தொடர்பாக கீழே மேலும் கலந்துரையாடப்படுகின்றது.

## 3. பாலியல் இலஞ்சம் ஒரு குற்றவியல் தவறு

பாலியல் இலஞ்சம் என்பது பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் உடல் ரீதியாக ஏற்படுத்திய மோசமான மற்றும் மாற்ற முடியாத தீங்காகும். அத்தோடு ஒரு தனிப்பட்டவரின் அந்தரங்கம் மற்றும் சமூக ஒருங்கமைப்புக்கு ஏற்படுத்திய கெடுதியாகும். அரசின் சேவை வழங்குனர்கள், அவர்களின் சேவைகளை நாடி வருவோரிடமிருந்து பாலியல் கோரிக்கைகளை மேற்கொள்ளும் போது, அச் செயற்பாடு அரச நிறுவனங்களின் செயற்திறனற்ற தன்மை, நிலைபேறான நிலை மற்றும் சட்டவாட்சி என்பவற்றைச் சிதைக்கின்றது. பற்பல சந்தர்ப்பங்களில், பாலியல் இலஞ்சத்தைக் கோருவதற்கு சமூக ஊடகம் மற்றும் தொலைபேசிகள் உபயோகிக்கப்பட்டன. குற்றவாளிகள், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை இரவு

வேளையில், அவர்கள் வீட்டில் இருக்கும் சமயத்தில் தொலைபேசி அழைப்புகள் ஊடாக இலக்கு வைக்கின்றனர். அவற்றைத் தவிர்க்க முடியாத ஒரு நிலைக்கு அல்லது தெரிவிற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை இட்டுச் செல்கின்றது. இந் நடவடிக்கைகள் குற்றவியல் நோக்குடனான நடத்தைக்கான உதாரணங்களாகும் என்பதுடன் அதற்காக குற்றவாளிகள் தண்டிக்கப்படுதல் வேண்டும். பாலியல் இலஞ்சத்தில் ஒப்புதல் ஒரு முக்கிய விடயமாக உள்ளது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் சிலர் வாய் மொழி மூலமாக மறுப்பதற்கு முயற்சித்தனர், மற்றும் சிலர் இல்லை என மறுப்புத் தெரிவிப்பதற்கு உடல் ரீதியான வன்முறையை உபயோகித்தனர், அநேகமான சமயங்களில் அவை பலனற்றவையாக இருந்தன. ஏனைய சந்தர்ப்பங்களில், சம்மதித்தல் அல்லது மறுத்தல் ஆகியன சம்பவத்திற்கு தேவையற்றதாக இருந்தது. குற்றவாளிகள் பாலியல் வன்முறையில் ஈடுபடுவதற்கு வற்புறுத்தல் அல்லது வன்முறையை உபயோகித்தனர். அச் சந்தர்ப்பங்களில், குற்றம் பாலியல் இலஞ்சமாகவும் அதே போன்று பாலியல் வன்முறையாகவும் புரிந்து கொள்ளப்படுகிறது.

பாலியல் இலஞ்சத்தைக் கோருவதில் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காக செயற்பட்டனர் என்பது ஆய்விலிருந்து வெளிப்பட்டது. அச்சம், களங்கம், குற்றவியல் நீதி முறையில் நம்பிக்கையில்லாமை, உதவியில்லாத நிலை காரணமாகவும் மற்றும் உதவியற்றவர்களாக அவர்கள் உணர்ந்தமையாலும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்குத் தவறினர். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் பலர் பாலியல் இலஞ்ச அனுபவத்தால் அதிர்ச்சி நிறைந்தவர்களாகவும், மனதளவில் நொறுங்கிப் போனவர்களாகவும் காணப்பட்டனர். வறுமை, பால்நிலைசார் பாரபாட்சம் மற்றும் பராமரிப்பு பொறுப்புகள் போன்ற சிக்கலான சமூக யதார்த்தங்களை அவர்கள் ஏற்கனவே முகங்கொடுத்துக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கொள்ளப்பட்ட பாலியல் கோரிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையைத் தொடர்வதற்கு உணர்வு ரீதியான, நிதி அல்லது சமூக வளங்களை அவர்கள் கொண்டிருக்கவில்லை.

குற்றவியல் நீதியை வழங்குவதற்கு பொறுப்பளிக்கப்பட்ட அதிகாரத்திலுள்ள அதே பணியாட்களே குற்றமிழைத்தவர்களாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களால் இனங் காணப்பட்டமை, ஆய்வின ஒரு முக்கிய கண்டறிதலாக உள்ளது. இவை ஆழமான நேர்காணல்கள் மற்றும் மாற்றுப் பாலினத்தவர்களுடனான தெரிவுச் செய்யப்பட்ட குழுக் கலந்துரையாடல்களில் தெளிவாக வெளிவந்தன. பொலிஸ் உத்தியோகத்தர்கள் அல்லது சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பாலியல் இலஞ்சத்தில் குற்றவாளிகளாக குற்றம் சார்த்தப்படுகையில், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் நீதித் துறையால் பாதிக்கப்பட்டவர்களாக உணர்ந்தனர். அதிகார பலம் கொண்டவர்களுக்கு சட்டம் சாதகமாகச் செயற்படுவதாகவும், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் நீதி அல்லது பொறுப்புக்கூறலுக்கு எவ்வித சாத்தியமும் இல்லையென எண்ணுகின்றனர்.

> ‘ அப்படியானால் எங்களுக்கு கொடுப்பதற்கு உன்னிடம் என்ன உள்ளது? எங்களோடு இரு. (மறைமுகமாக பாலியல் ரீதியான கோரிக்கை) உனக்கு, இதனை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டாமாயின் எங்களை மகிழ்ச்சிப்படுத்து’ என அப்போது அவர் என்னைக் கேட்டார். இவை எல்லாவற்றையும் நான் (உங்களுக்கு) சொல்கிறேன், அதனால் இவ்வாறான சம்பவம் வேறு ஒருவருக்கும் நடக்காது ’
>
> நுஷ்ரத் (கொழும்பு, மேல் மாகாணம்)

> ‘ ஒன்றுமேயில்லாத விடயங்களுக்காக பொலிஸ் நிலையங்கள் மற்றும் நீதிமன்றங்களுக்கு செல்வதற்கு நான் விரும்பவில்லை. சட்டம் அவர்களுக்கு சாதகமாக இருக்கும். நாளின் இறுதியில், நாங்கள் வெறுமனே அவமானப்படுத்தப்படுவோம். ’
>
> கயனி (அம்பாந்தோட்டை, தென் மாகாணம்)

> ‘
> இப்போது நான் பொலிஸ்காரர் ஒருவரிடமிருந்து பாதைத் திசை பற்றி கேட்பதற்கு கூட பயம் கொள்கிறேன்’. மேலும், இன்று கூட தெரியாத ஒரு இலக்கத்திலிருந்து தொலைபேசி அழைப்பைப் பெறும் போது எனது இதயம் பயத்தினால் வேகமாக துடிக்கின்றது. ’
>
> ஜீவா (மாத்தளை, மத்திய மாகாணம்)

> ‘
> சட்டத்தைப் பாதுகாப்பதற்காக அங்கே இருக்கும் ஒரு நபர் இப்படியாக நடந்து கொள்வது, நிச்சயம் பெரிய குற்றமென நான் எண்ணினேன் ’
>
> லலிதா (மாத்தளை, மத்திய மாகாணம்)

# முக்கிய ஆய்வு முடிவுகள்

## தனிப்பட்டத் தாக்கம்

- பாலியல் இலஞ்சம் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மீது ஓர் ஆழமான உளவியல் மற்றும் உணர்வு ரீதியான தாக்கத்தைக் ஏற்படுத்துகின்றது.
- பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் சம்பவம் காரணமாக மன ரீதியாகக் களங்கத்திற்குள்ளாவதோடு சமூகத்திலும் களங்கத்தை அல்லது அவப்பெயரை அனுபவிக்கின்றனர்.
- மாற்றுப் பாலின சமூகத்திலிருந்த பாலியல் தொழிலாளர்களால் தெரிவிக்கப்பட்ட பாலியல் இலஞ்சத்தின் வடிவங்கள் கடுமையானவை மற்றும் மனிதாபிமானம் அற்றவை.
- அரசச் சேவைகளை அணுகுவதற்கு பாலியல் இலஞ்சம் ஒரு தடையாகும். பாலியல் இலஞ்சத்திற்கு உட்படுவோம் என நபர்கள் அச்சம் கொள்வதால், ஒரு சிகிச்சையைப் பெறல் அல்லது அரசச் சேவைகளை நாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல், முற்றிலும் அவசியமானது இல்லையெனின குறித்த அரசச் சேவைகளை அணுகுவதை அவர்கள் தவிர்க்கின்றனர்.
- வாழ்வாதாரத்திற்கான ஓர் உரிமை மற்றும் நிலமொன்றைச் சொந்தமாகக் கொண்டிருப்பதற்கான உரிமை போன்ற அவர்களது பொருளாதார உரிமைகளை அனுபவிப்பதிலிருந்து பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை பாலியல் இலஞ்சம் தடை செய்கிறது.
- ஒரு நம்பிக்கைக்குரிய நபர் தவிர்த்து தங்களது அனுபவம் பற்றி பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் பேசுவதில்லை. அதனால், அவர்களில் பலர் ஆய்வில் பங்குக் கொள்ளக் கிடைத்த வாய்ப்பினை வரவேற்றதுடன் பச்சாதாபம் (Empathy) கொண்ட செவிமடுப்பவர் ஒருவருடன் இரகசியத்தன்மை அடிப்படையில் சம்பவம் பற்றி மீளவும் நினைவுகூர்ந்தனர்.

- பாலியல் இலஞ்சம் காரணமாக அவர்கள் அனுபவிக்கும் மனவுளைச்சல் மற்றும் களங்கம் என்பவற்றைக் கையாள்வதற்கான உளச் சமூக உதவியை அணுகுவதற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் அறியாதிருந்ததுடன் அதற்கான வளங்களையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை.

## தொடர்பாடல் தொழில்நுட்பம்

- பாலியல் கோரிக்கைகளை விடுப்பதற்கும் தனிப்பட்ட முறையில் அவர்கள் மேற்கொண்ட பாலியல் இலஞ்சத்தை தொடர்ந்து கோருவதற்கும் குற்றவாளிகளால் தொலைத்தொடர்புத் தொழில் நுட்பம் மற்றும் சமூக ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன. பாலியல் இலஞ்சத்தைக் கோருவதற்கான ஒரு பொதுவான முறையாகத் தொடர்பாடல் தொழில்நுட்பம் காணப்படுகின்றது.
- குற்றவாளிகள் தொலைபேசித் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகம் ஊடாக தங்களது பாலியல் கோரிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தனர். இதன் காரணமாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள், தாம் குற்றவாளிகளால் பின்தொடரப்பட்டு வேட்டையாடப்படுவதாக உணர்ந்தனர்.
- தரவுகளின் இரகசியத்தன்மைக்கான உரிமை மற்றும் பாதிக்கப்பட்டு தப்பிப்பிழைத்தவர்களின் தனியுரிமை என்பவை பாலியல் இலஞ்சங்களைக் கோருவதற்காக குற்றவாளிகளால் மீறப்பட்டன. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் தனிப்பட்ட தகவல்கள் பாலியல் இலஞ்சத்துக்காக அரசச் சேவையளிப்பவர்களால் உபயோகிக்கப்படுவது ஒரு குற்றவியல் தவறாகும்.

## மாற்றுப் பாலின சமூகத்தின் உறுப்பினர்கள் மீதான தாக்கம்

- பாலியல் தொழிலாளர்களாக உள்ள மாற்றுப் பாலின சமூகத்தின் உறுப்பினர்கள் பாலியல் இலஞ்சத்திற்காக வழக்கமான முறையில் இலக்கு வைக்கப்படுவதாக உணர்ந்தனர்.
- பாலியல் இலஞ்சத்தினால் ஏற்படுத்தப்பட்ட களங்கம், மனவுளைச்சல் மற்றும் வறுமையின் தீவிரம் மாற்றுப் பாலின சமூகத்தின் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு அதிகமானதாக இருந்தது. இலங்கையில் ‘இயற்கை ஒழுங்குக்கு எதிராக தன்னிச்சையான உடலுறவு’ மற்றும் ‘ஏதேனும் முற்றிலும் அநாகரீகமான பாலியல் செயற்பாடு’ என்பவற்றின் காரணமாக இவர்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளனர்.
- சமுதாயத்தில் அவர்களின் ஓரங்கட்டப்பட்டுள்ள அந்தஸ்தின் காரணமாக, மாற்றுப் பாலின சமூகத்தின் உறுப்பினர்கள் பாலியல் இலஞ்சக் குற்றத்திற்காக சட்டத்தில் உதவுவதற்கு தங்களுக்கு வழியெதுவும் இல்லையென நினைக்கின்றனர்.

## குடும்பம் மற்றும் சமூகம் மீதான தாக்கம்

- பாலியல் இலஞ்ச சம்பவத்தில் குடும்ப உறுப்பினர்கள் சிக்கிக் கொள்ளும் போது, அவர்கள் தொந்தரவுகளுக்கு இலக்காக முடியுமென்பதால் குடும்பத்தின் அவ்வுறுப்பினர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படலாம்.
- பாலியல் இலஞ்சம் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை அவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து அச்சம் கொண்டவர்களாக்குகின்றது. பாலியல் கோரிக்கைகளுக்காகத் தாங்களோ அல்லது தங்களது குடும்ப உறுப்பினர்களோ திரும்பவும் அணுகப்படலாமென அவர்கள் உணர்கின்றனர். குற்றவாளிகளால் வேட்டையாடப்படுவதாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் உணர்கின்றனர்.
- பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் பாலியல் இலஞ்ச சம்பவத்தை

தங்களது அன்பிற்குரியவர்களிடமிருந்து இரகசியமானதாக வைத்திருக்கும் போது, அது தனிப்பட்ட உறவுகள் மீதும் மற்றும் ஏனைய நலன்களிலும் ஓர் எதிர்மறையான தாக்கத்தைக் கொண்டுள்ளது.

- சில சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் அவர்களின் நெருக்கமான மற்றும் நம்பிக்கைக்குரிய சமூகத்திலிருந்து மாத்திரமே ஆதரவு மற்றும் ஆறுதல் கிடைக்கின்றது.

## பாலியல் இலஞ்சத்தின் நலிவுற்றத் தன்மைக்கு இட்டுச் செல்லும் காரணிகள்

- நீதி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளிலிருந்து முக்கிய தகவலளிப்பவர்கள் தங்கள் துறைகளில் பாலியல் இலஞ்சம் நடைபெறுவதாக அபிப்பிராயம் உடையவர்களாக இருந்ததுடன் பலர் அவ்வாறான சம்பவங்கள் குறித்து இரண்டாவது மூலம் ஊடாகவே அறிந்து கொண்டதாகத் தெரிவித்தனர்.
- பெண்களைப் பொறுத்த வரை, வீட்டில் அவர்களது வாழ்க்கைத் துணையின் பிரசன்னம் இல்லாமை (தொழில் நிமித்தமோ அல்லது தடுத்து வைத்திருக்கப்பட்டிருத்தல் காரணமாகவோ) அவர்களைப் பாலியல் இலஞ்சத்தின் நலிவுற்றத்தன்மைக்கு இட்டுச் செல்கின்றது.
- சட்டவிரோத ஔடதங்கள் விநியோகம் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் அல்லது ஒரு பாலியல் தொழிலாளராக இருத்தல் போன்ற சட்டவிரோதமாக கருதப்படும் செயற்பாடுகளில் பெண்கள் மற்றும் மாற்றுப் பாலின சமூகத்தின் உறுப்பினர்களின் ஈடுபடுதலும் பாலியல் இலஞ்சத்தின் நலிவுற்றத்தன்மைக்கு அவர்களை இட்டுச் செல்கின்றது.
- வறுமை மற்றும் உடற் குறைபாடுகள் அல்லது அங்கவீனங்கள் என்பவை பெண்கள் மற்றும் மாற்றுப் பாலின சமூகத்தின் உறுப்பினர்களை பாலியல் இலஞ்சத்தின் நலிவுற்றத்தன்மைக்கு ஆளாக்கும் ஏனைய இரண்டு காரணிகளாகும்.
- சில சந்தர்ப்பங்களில், அரசத் துறையிலிருந்து சேவைகளை நாடும் ஒரு நடவடிக்கை கூட பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை பாலியல் இலஞ்சத்தின் நலிவுற்றத்தன்மைக்கு இட்டுச் செல்கின்றது.
- தகவலளிப்பவர்கள் அடையாளப்படுத்திய பயிலுனர்கள், கனிஷ்ட ஊழியர்கள் மற்றும் சேவை பெறுனர்களை பாலியல் இலஞ்சத்தின் பாதிப்பிற்கு உள்ளாகுபவர்களாக இனங் கண்டனர்.

## பாலியல் இலஞ்சம் பற்றி பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் கண்ணோட்டம்

- பாலியல் இலஞ்சம் தார்மீக மற்றும் ஒழுக்க ரீதியாகத் தவறானவை என பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் உறுதியான எண்ணப்பாட்டைக் கொண்டுள்ளனர்.
- பாலியல் இலஞ்சத்தை சட்டம் வெளிப்படையாகத் தடைசெய்யுமா என்பது பற்றி பலர் நிச்சயமற்று இருந்தனர். ஆனாலும், அது ஒரு குற்றவியல் ரீதியான தவறு என்ற கருத்தை அவர்கள் கொண்டிருந்தனர்.
- பாலியல் இலஞ்ச அனுபவத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் அச்சம், உதவியற்ற தன்மை மற்றும் மனவுளைச்சலை உணர்கின்றதாக விபரித்தனர்.
- ஏனைய பல பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் தாங்களும் ஒருவர் என்ற உணர்வை பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் கொண்டிருந்தனர்.

## குற்றவாளிகளின் கண்ணோட்டங்கள் (பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களால் தெரிவிக்கப்பட்டவாறு)

- பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் தரப்பிலான சம்மதம் பற்றிப் பொருட்படுத்தாது, குற்றவாளிகளால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் குறிவைக்கப்பட்டு வெறுமனே பாலியல் இன்பத்திற்கான ஒரு மூலமாக குறைத்து மதிக்கப்பட்டனர்.
- குற்றவாளிகளில் சிலர் பாலியல் இலஞ்சம் பற்றி மிகவும் சாதாரணமானது மற்றும் ஒரு கொடுக்கல் வாங்கல் வகையானது (அதற்கு இது) எனும் ரீதியிலான மனப்பாங்கைக் கொண்டிருந்தனர். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மீது அவர்களின் கோரிக்கையின் தாக்கம் குறித்து குற்றவாளிகள் அலட்சியம் உள்ளவர்களாக அல்லது கவலையற்றவர்களாகக் காணப்பட்டனர்.
- பல பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் இலஞ்சக் கோரிக்கைகளுக்கு ஒப்புதலளிக்க வெளிப்படையாக அல்லது உட்கிடையான வகையில் மறுத்தனர். ஆனால், அச் சந்தர்ப்பங்கள் பலவற்றில், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் சம்மதிக்காமை தொடர்பில் கவனத்தில் கொள்ளாத அலட்சியம் கொண்டவர்களாக குற்றிமிழைப்பவரகள் இருந்தனர்.
- தங்களது சம்மதம் பற்றிக் குற்றவாளிகள் எக் கவனமும் செலுத்தாதவர்களாக இருந்தனரென மாற்றுப் பாலின சமூகத்திலிருந்த பாலியல் தொழிலாளர்கள் தெரிவித்தனர். தங்களது சம்மதம் குற்றவாளிகளுக்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லையெனவும் அவர்கள் குறிப்பிட்டனர். அவர்கள் பாலியல் தொழிலாளர்கள் என்பதால், பாலியல் இலஞ்சம் வழங்கப்படல் வேண்டுமென்பது குற்றவாளிகளின் அனுமானமாகக் காணப்பட்டது.

## பாலியல் இலஞ்சத்திற்கான பரிகாரங்கள் பற்றிய கண்ணோட்டங்கள்

- குற்றமிழைப்பவர்களால் தண்டனையிலிருந்து தப்பித்தல் பாலியல் இலஞ்சத்திற்கான சட்டப் பரிகாரங்களை நாடுவதற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் தயங்குவதற்கான ஒரு காரணமாக முக்கிய தகவலளிப்பவர்களால் இனங் காணப்பட்டது.
- பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் தங்களது உரிமைகளைப் பாதுகாப்பதாக சட்டம், சட்டப் பணியாளர்கள் மற்றும் சட்ட நிறுவனங்களைப் பார்க்கவில்லை. பாலியல் இலஞ்சத்தைக் கோரிய குற்றவாளிகள் மற்றும் சட்ட நிறுவனங்களில் பணியாற்றும் பணியாட்களைச் சட்டமே பாதுகாக்கின்றது என்பது அவர்களின் வாழ்க்கையில் கண்ட அனுபவமாகும்.
- பாலியல் இலஞ்சத்திற்கு ஒரு செயற் திறன்மிக்க பரிகாரத்தை சட்டம் அல்லது சட்ட நிறுவனம் அவர்களுக்கு வழங்க முடியுமென பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் நினைக்கவில்லை.
- பாலியல் இலஞ்சம் குறித்தான ஏதேனும் விசாரணை மேற்கொள்ளப்பட்டாலும் கூட, அது பக்கச்சார்பற்றதாகவோ அல்லது இரகசியத் தன்மை கொண்டதாகவோ இருக்காதென, பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் அபிப்பிராயம் கொண்டிருந்தனர்.
- ஒரு முறைப்பாடு, விசாரணை மற்றும் புலனாய்வு என்பவற்றின் பகிரங்கமான தன்மை, ஏதேனும் சட்டப் பரிகாரங்களை நாடுவதிலிருந்து பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களைத் தடுத்தது. தற்போதுள்ள நடைமுறைகள் பாதிக்கப்பட்டவருக்கு சார்பானதாக காணப்படவில்லை.
- குற்றவாளிகள் அவர்களுக்கு சட்டத்தால் பொறுப்பளிக்கப்பட்ட தற்றுணிபு அதிகாரத்தை பாதிக்கப்பட்டுத் தப்பிப் பிழைத்தவர்களிடமிருந்து பாலியல் இலஞ்சம் கோருவதற்கு பிரயோகித்தனர்.

- ‘இயற்கை ஒழுங்குக்கு’ மாறான பாலியல் செயற்பாடுகளைக் குற்றமாக்கல் மற்றும் அலைந்து திரிபவர்கள் கட்டளைச் சட்டத்தின் (Vagrants Ordinance) கீழ் பாலியல் தொழிலாளர்களின் கைது என்பவற்றின் காரணமாக ஏதேனும் பாதுகாப்பு, பரிகாரம் அல்லது நீதியை சட்டம் அவர்களுக்கு வழங்கும் என அவர்கள் எதிர்பார்க்க முடியாது என்ற கண்ணோட்டத்தை பாலியல் தொழிலாளர்கள் மற்றும் மாற்றுப் பாலின சமூக உறுப்பினர்கள் கொண்டிருந்தனர்.



## பெருந்தொற்றின் தாக்கம்

- பெருந்தொற்றின் போது நடமாட்டங்கள் மீதான மட்டுப்பாடு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு சில பாதுகாப்பினை அளித்தது. இதன் போது குற்றமிழைப்பவருடன் தொடர்பினை அவர்கள் தவிர்ப்பதற்கு முடியுமாக இருந்தது.
- மாற்றுப் பாலினச் சமூகத்திலிருந்த பாலியல் தொழிலாளர்களைப் பொறுத்த வரை, பெருந்தொற்று அவர்களை பாலியல் இலஞ்சங்களுக்கு கூடுதலாக பாதிக்கச் செய்தது. தங்களது வாழ்வாதாரத்தில் ஈடுபடும் முகமாக ஊரடங்குச் சட்டங்களை மீறுவதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் அதன் விளைவாக பாலியல் கோரிக்கைகளுக்காக அவர்கள் இலக்கு வைக்கப்பட்டனர்.

# பரிந்துரைகள்

## அரசிற்கான பரிந்துரைகள்

- ஒரு சுயாதீனமான அரசியலமைப்புச் சபையின் மீள் அறிமுகம் ஊடாக இலஞ்சம் அல்லது ஊழலைப் விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் சுயாதீனத்தை உத்தரவாதப்படுத்தல்.
- ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கைக்கு உள்நாட்டின் சட்ட வலுவை அளிப்பதற்கு ஏதுவான சட்டவாக்கத்தை ஏற்றுக்கொள்ளுதல்.
- சட்டச் சீர்திருத்தங்கள் ஊடாக பாலியல் இலஞ்சம் அல்லது அவாநிறைவின் பாலியல் வடிவங்களை வெளிப்படையான வகையில் தடைசெய்தல் மற்றும் குற்றமாக்குதல்.
- வயதிற்கு வந்தோர்கள் மத்தியில் இயற்கைக்கு மாறான பாலுறவைக் குற்றமாக்கும் தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 365 நீக்குதல்.
- அலைந்து திரிபவர்கள் கட்டளைச் சட்டத்தினை இரத்துச் செய்தல்.
- பொது இடங்கள் மற்றும் அரச சேவைகளுக்கான அணுகுவழிகள் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பாலியல் மற்றும் மாற்றுப் பாலினத்தவர்கள் சம உரிமைகளை வெளிப்படையான வகையில் அங்கீகரித்தல்.
- ஓர் ஆலோசனைச் செயன்முறையின் பின்னர் வர்த்தக ரீதியில் பாலியல் தொழிலை சட்டமயமாக்குதல் மற்றும் நெறிமுறைப்படுத்துவதற்கும் சட்டத்தை உருவாக்குதல்.
- பாலியல் இலஞ்சச் சம்பவங்களுக்கான காரணங்களை விசாரிப்பதற்கு ஆய்வுகளை நடத்துதல்.
- அவ்வாய்வுகளின் கண்டறிதல்களை மற்றும் முடிவுகளை பகிரங்கமாக வெளிப்படுத்தல்.
- பாலியல் இலஞ்சம் மற்றும் அதன் கடுமையான தன்மைக் குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குதல்.
    - தேசிய மட்டத்திலிருந்து சமூக மட்டம் வரையான அனைத்து மட்டங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும்.
    - அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக பெண்கள் மற்றும் பாலியல் மற்றும் மாற்றுப் பாலினத்தவர்கள் பயன் பெறுவதை உறுதிசெய்தல்.
    - விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் நாடகம் மற்றும் கலை வடிவங்களை ஈடுபடுத்தல்.
    - விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு முகநூல் போன்ற சமூக ஊடகங்களை உபயோகித்தல்.
    - அரச சேவகர்கள் ஊடாக மற்றும் சமுர்த்திப் பயனாளிகளுக்கான கூட்டங்கள் போன்ற சமூக மட்டக் கூட்டங்களில் சமூக மட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் போன்ற எதிர்காலங்களில் குற்றமிழைக்கும் சாத்தியம் கொண்டவர்கள் மத்தியில் விழிப்புணர்வு உருவாக்குவதை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பாலியல் இலஞ்சத்தை தடுப்பதற்கு, விசாரணை மேற்கொள்வதற்கு மற்றும் வழக்குத் தொடுப்பதற்கும் பரிகாரம் அளிப்பதற்கும் தேசிய மட்டத்தில் குறிப்பிட்ட வகையிலான கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுதல். குறிப்பாக, பாலியல் இலஞ்சத்திற்கு அதிகளவில் பாதிக்கப்படும் பெண்கள், மாற்றுப் பாலினச் சமூகத்தின் உறுப்பினர்கள் ஒரு தேசியக் கொள்கையை வரைவதில் கலந்தாலோசிக்கப்படுதல் வேண்டும். தேசியக் கொள்கை காலத்திற்கு காலம் மீள்பரிசீலனைக்கு உட்படுதல் வேண்டும்.
- பாலியல் இலஞ்சத்தில் பாதிக்கப்பட்டவராக இருப்பதில் அவர்களது அனுபவங்கள் பற்றி பகிரங்கமாகப் பேசுவதற்கு

பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் அறிவூட்டுதல் மற்றும் வலுவூட்டுதல். இச்செயற்பாடு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் பாலியல் இலஞ்சத்தில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மீதுள்ள களங்கம் அல்லது அவப்பெயரைக் குறைக்கும். இத்தகைய பகிரங்க ஈடுபாடு நீதியை நாடுவதற்கும் கூட அவர்களை ஊக்குவிக்கலாம்.

- அரச சேவகர்கள் மத்தியிலும் அவ்வாறே பொதுமக்கள் மத்தியிலும் பாலியல் இலஞ்சத்திற்கு தொடர்புடையதான களங்கம் பற்றிய ஒரு மனநிலையை மாற்றுவது தொடர்பாக முன்னோடியாகச் செயற்படல்.
- பாலியல் இலஞ்ச சம்பவத்தில் அவர்களது சகாக்கள் சிலரது உடந்தையான நிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல். அவ்வாறான பயிற்சி பொலிஸ் சேவையில் பாலியல் இலஞ்ச நிகழ்வுகளைத் தடுப்பதையும் இலக்குக் கொண்டவையாக மற்றும் பாலியல் இலஞ்சத்திற்கு சகிப்புத்தன்மையற்றதாக (Zero Tolerance) ஸ்தாபிப்பதையும் இலக்குக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நீதித் துறையிலான பாலியல் இலஞ்சச் சம்பவங்களில் அவர்களின் சகாக்கள் மற்றும் சில பணியாளர்களின் உடந்தையான நிலை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு சட்டத்தரணிகளைப் பயிற்றுவித்தல். அவ்வாறான பயிற்சிகள், பாலியல் இலஞ்சத்தின் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் சட்டப் பரிகாரங்களைத் தேடுவதற்கு இலஞ்சச் சட்டம், பொதுச் சட்டப் பரிகாரங்கள் (அடிப்படை உரிமைகள் மற்றும் எழுத்தாணைகள்) மற்றும் தனியார் சட்டப் பரிகாரங்கள் உட்பட இருக்கும் சட்டவாக்கங்களை உபயோகிப்பதற்கும் மற்றும் கவனத்தில் கொள்வதற்கும் சட்டத்தரணிகளைத் தயார்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.
- பல்கலைக்கழக மட்டம் போன்ற உயர் கல்வி மட்டத்தில் அக்கறை கொண்டவர்கள் மற்றும் பொதுமக்கள் பயிற்றுதலை இலக்காகக் கொண்டு தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட பயிற்சி நெறிகளை அளித்தல். அவ்வாறான ஒரு கல்வி நிகழ்ச்சித்திட்டம் பாலியல் இலஞ்சத்தை ஒரு மனித உரிமைகள் மீறலாக, ஒரு குற்றவியல் தவறாக அதே போன்று ஊழலின் ஒரு வெளிக்காட்டலாக கவனத்தில் கொள்ளும் வண்ணம் வடிவமைக்கப்படுதல் வேண்டும்.
- பாலியல் இலஞ்ச முறைப்பாடுகளைப் புலனாய்வு அல்லது விசாரணை மேற்கொள்வதற்கு இரண்டு ஆணைக்குழுக்களுக்கு அதிகாரமளிக்கும் வகையில் இச் சட்டக் கட்டமைப்பு விதிமுறைகள் திருத்தப்படல் வேண்டுமா என்பதை இனங் காண்பதற்கு இலஞ்ச ஆணைக்குழு சட்டம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம் என்பவற்றை மீள்பரிசீலனை செய்தல்.
- குற்றம் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு உதவுதல்.
- குறிப்பாக குற்றங்கள் மற்றும் குற்றங்களின் முறைப்பாடுகளைப் பகிரங்கமாகத் தெரிவிப்பதில், விசேடமாக பாதிக்கப்பட்டோருக்கான பாதுகாப்பை அளிப்பதற்கு, பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கான பாதுகாப்புச் சட்டத்தை திருத்துதல்.
- பாலியல் இலஞ்சம் பற்றி முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கான நடைமுறைகளை மறுபரிசீலித்தல். இதனால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் சார்பாக முறைப்பாடுகளை இடைச் செயற்பாட்டாளர்கள் மேற்கொள்ளலாம்.
- முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு இரகசிய விசேட அழைப்பு வசதிகளை (Hotline) ஸ்தாபித்தல்.
- பாலியல் இலஞ்சக் குற்றமிழைப்போரை இனங்காண்பதற்கு இரகசியக் காவலர்களை ஈடுபடுத்தல்.
- பாலியல் இலஞ்சம் தொடர்பான நீதிமன்ற

நடவடிக்கைகள் புகைப்படக் கருவி (Camera) முன்பாக நடத்தப்படல் வேண்டும்.

- பாலியல் இலஞ்சத்திற்கான தண்டனை ஒரு கடுமையான அபராதத் தொகையை உள்ளடக்குவதை உறுதிப்படுத்துவதற்கு இலஞ்சச் சட்டத்தை மறுசீரமைத்தல்.
- பாலியல் இலஞ்சத்தின் பாதிப்புத் தன்மைக்கு பொருத்தமான ஒரு காலப் பகுதிக்கு அரசச் சேவையில் குற்றமிழைப்பவர்களின் வேலையிலிருந்தான ஒரு தடையை அமுல்படுத்தல்.
- பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு பயனுறுதியான வகையில் இழப்பீட்டினை வழங்குதல்.
- பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு பயனுறுதியான நிதி இழப்பீட்டினை வழங்குதல்.
- பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உளவள ஆலோசனை வழங்குதல்.

## சிவில் சமூகத்திற்கான பரிந்துரைகள்

- பாலியல் இலஞ்சத்தினைத் தடுப்பதற்கு அரசின் பொறுப்பைப் பூர்த்தி செய்தலை பரிசீலிப்பதற்கு ஆய்வுகள் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.
- பாலியல் இலஞ்சத்தைத் தடுப்பதிலுள்ள தற்போதைய சட்ட விதிமுறைகள் மற்றும் பரிகாரங்களின் செயற்திறனைக் கண்காணித்தல்.
- பாலியல் இலஞ்ச சம்பவங்கள் மற்றும் அவற்றின் பாதிப்பின் தீவிரம் பற்றி பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை சிவில் சமூக ஸ்தாபனங்கள் செயல்திறனுடன் ஏற்படுத்தல் வேண்டும்.
- பாலியல் இலஞ்சம் தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு பெண் குழுக்கள் கூட்டாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- பாலியல் மற்றும் பால்நிலைச்சார் சிறுபான்மையினர் பொதுவாக பாரபட்சங்களை அனுபவிப்பதால், எதிர்காலத்தில் பாலியல் இலஞ்சம் நிகழுவதைத் தடுப்பதற்காக அவர்கள் கூட்டாக ஒழுங்கமைத்துக் கொண்டும் மற்றும் பரிகாரங்களை நாடுவதற்கு அணிதிரள்வதற்கும் முடியும்.
- பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மத்தியில் ஒற்றுமை மற்றும் ஆதரவிற்கான ஒரு வலையமைப்பை வளர்த்தல்.

## தனியார் துறை, தொழில்சார் அமைப்புகளுக்கான பரிந்துரைகள்

- பாலியல் இலஞ்சம் தொடர்பில் சகிப்புத்தன்மையில்லாதக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.
- பாலியல் இலஞ்சத்தை வெளிப்படையான வகையில் தடுப்பதற்கும் மற்றும் ஒரு வலுவான மற்றும் நியாயமான முறைப்பாட்டுப் பொறிமுறையை வழங்குவதற்கும் உரிய வகையில் தொழில்சார் நடத்தைக் கோவைகளை மீள்பரிசீலித்தல் மற்றும் மறுசீரமைத்தல்.
- பாலியல் இலஞ்ச சம்பவங்களைக் கண்காணிப்பதற்கு சிவில் சமூக முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்.
- பாலியல் இலஞ்சத்தை வெளிப்படையான வகையில் குற்றமாக்குவதற்கு சட்டச் சீர்திருத்தங்களுக்கான ஆதரவு முயற்சிகளுக்கு உதவுதல் மற்றும் அனுசரனையளித்தல்.
- ஒரு நிறுவன மட்டத்தில் பாலியல் இலஞ்சம் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்தல்.
- பாலியல் இலஞ்சத்தில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு உதவுவதற்கு நிதிகளைப் பங்களித்தல்.
- பாலியல் இலஞ்சத்தில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கான செயற்திறன் மிக்க பரிகாரங்களை உறுதிப்படுத்துவதற்கு சட்டச் சீர்திருத்தங்களுக்கு ஆதரவு திரட்டல்.

# உசாத்துணைகள்


- 'இலங்கையில் பாலியல் இலஞ்சம் தொடர்பான கொள்கைகளை திருத்தல்.' (சமத்துவம் மற்றும் நீதிக்கான  நிலையமஇ ஆகஸ்ட் 2020) (ஆங்கில ஆதாரம்)
- 'ஒன்றுக்கு இன்னொன்று ஈடாக (Quid pro quo): இலங்கையில் பாலியல் இலஞ்சம் தொடர்பான ஆய்வு' Daily FT (24 ஜனவரி 2020) இணைய அணுகல் https://www.ft.lk/Opinion-and-Issues/Quid-pro-quo-A-study-of-sexual-bribery-in-Sri-Lanka/14-694260 (ஆங்கில ஆதாரம்)
- 'பாலியல் சலுகைக்கான மிரட்டல் : ஒரு புதுப் பெயர், பழைய குற்றம். ஜனவரி 2020 (இணைய அணுகல்) http://www.independent.lk/sextortion-a-new-name-an-age-old-crime/ ) (ஆங்கில ஆதாரம்)
- 'பாலியல் இலஞ்சத்திற்கு உள்ளாகும் இராணுவக் கணவரை இழந்த பெண்கள்' (சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், ஜூலை 2018)
- 'பாலியல் இலஞ்சம் : ஊழலின் மௌனமான பக்கம்' Daily FT 3 செப்டெம்பர் 2020, (இணைய அணுகல் https://www.ft.lk/Opinion-and-Issues/Sexual-bribery-The-silenced-side-of-corruption/14-705482) (ஆங்கில ஆதாரம்)
- 'இலங்கையில் வடக்கில் ஏற்பட்ட யுத்தத்தினால் பாதிப்புற்ற பெண் குடும்பத் தலைவிகள் மீதான பாலியல் இலஞ்சம' (சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்,  மார்ச் 2016)
- 'மறைக்கப்பட்ட இரகசியம் : யுத்தத்திற்குப் பிற்பட்ட  மாவட்டங்களில் முஸ்லிம் பெண்கள் முகங்கொடுத்த  பாலியல் இலஞ்சம்' (சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம, ஜூலை 2018)
- வருடாந்த செயற்திறன் அறிக்கை  (இலஞ்ச ஆணைக்குழு 2019) (ஆங்கில ஆதாரம்)
- 'பாலியல் சலுகைக்கான மிரட்டல் தொடர்பான மௌனத்தை களைத்தல் : அதிகாரம், பாலியல், மற்றும் ஊழலுக்கிடையிலான தொடர்பு' ( டிரான்ஸ்பரன்சி இன்டர்நெசனல் 2020) (ஆங்கில ஆதாரம்)
- அரசு மற்றும் அரச சார்பான வேலை வாய்ப்பு கண்க்கெடுப்பு - 2016 (புள்ளி விபரவியல் திணைக்களம் 2018) (ஆங்கில ஆதாரம்)
- உலகலாவிய ஊழல் கணிப்பு 2019, இலங்கை' (டிரான்ஸ்பரன்சி இன்டர்நெசனல் 2019) (ஆங்கில ஆதாரம்)
- கதுாப்தீன் எதிர் இலங்கை அரசு  [1998] 3 Sri LR 107 (ஆங்கில ஆதாரம்)
- பெயரிடல், வெடகப்படுதல், பாலியல் சலுகைக்காகன மிரட்டலை முடிவுக்கு கொண்டு வருதல் : தொகுப்பு ( சர்வதேச பெண் நீதிபதிகளின் சங்கம். 2012)  (ஆங்கில ஆதாரம்)
- பாலியல் சலுகைக்கான மிரட்டல் : ஊழல் குற்றம் மற்றும் பாலியல் சுரண்டல்  ( சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் 2019 ) (ஆங்கில ஆதாரம்)
- ஊழலுக்கெதிரான ஐக்கிய  நாடுகள் உடன்படிக்கை 2004 (ஆங்கில ஆதாரம்)
- ஐக்கிய நாடுகளின் நாடு கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடபான உடன்படிக்கை 2000 (ஆங்கில ஆதாரம்)



உங்கள் உரிமைகள்
நிபந்தனைகள் வேண்டாம்
பாலியல் இலஞ்சம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஊழலின் ஒரு வடிவமாகும்
1954
முறைப்பாடுகளுக்கு அழையுங்கள்

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்

16/1, மொரிஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை

தொலைபேசி/தொலைநகல: +94 11 2055404

www.cejsrilanka.org | srilanka.cej@gmail.com

/Centre-for-Equality-and-Justice

/cej_srilanka

/CEJ_SriLanka

/channel/CEJ Sri Lanka



ISBN 9786245847228